13.06.2025 வா.சா.1 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை (ஒ.எஸ்.எண். 164 /2020 ) திருமதி.பர்வதாஆனந்தம்.

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>-

1) வழக்கு விவரம் எனக்கு நன்கு தெரியுமா என்றால் தெரியும். தபசில் 3 அயிட்ட சொத்துகளுக்கு வடக்கே கிழமேலாக கோவில்பட்டி - திருவேங்கடம் செல்லும் மெயின் ரோடு செல்கிறது என்றால் சரிதான். கோவில்பட்டி - திருவேங்கடம் செல்லும் ரோட்டிற்கு தென்புறம் கருப்பசாமிக்கு பாத்தியப்பட்ட 3 ம்தபசில் நிலம் உள்ளது என்றால் சரிதான், அதற்கு தென்புறம் எனக்குப் பாத்தியப்பட்ட 2 ம்தபசில் சொத்து உள்ளது என்றால் சரிதான். எனது புஞ்சைக்கும், பிரதிவாதியின் புஞ்சைக்கும் மேற்கு பக்கம் தென்வடலாக ஓடை செல்கிறது என்றால் சரிதான். தென்வடலாக உள்ள ஓடையில் இருபுறமும் கரைகள் உள்ளதா என்றால் உள்ளது. எனது புஞ்சைக்கு சர்வே எண். 271/3 ஏ என்றால் என்றால் தவறு சர்வே எண்.271/3 சி ஆகும். பிரதிவாதி புஞ்சைக்கு 4 சர்வே எண்கள் கொண்டவை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வழக்கில் என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் பாதை கேட்டு வழக்கு போட்டுள்ளோம். நான் பாதை கோருவது வருவாய் ஆவணங்களில் இல்லை என்றால் பத்திரத்தில் உள்ளது. பாதைக்கு என்று தனி சர்வே எண் கிடையாது என்றால் சரிதான். தபசில் சொத்தை அமைவிடத்தை காட்டக்கூடிய புல வரைபடம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் வழக்கில் கோரும் பாதையின் நீளம், அகலம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். 3 ம்தபசில் புஞ்சை வழியாக எனது இடத்திற்கு பாதை செல்வதாக சொல்லுவதற்கு வருவாய் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். 3 ம்பிரதிவாதிக்குப் பாத்தியப்பட்ட சொத்தில் தற்போதும் பருத்தி விவசாயம் செய்து வருகிறார் என்றால் சரிதான்.

2) எனது பத்திரத்தில் சொல்லப்பட்டுள்ள தூர்ந்து போன கிணறு என்று காண்பிக்கப்பட்டுள்ளது அது பிரதிவாதியின் நிலத்தில் மைய்யப்பகுதியில் அமைந்துள்ளது என்றால் ஆமாம். பிரதிவாதியின் நிலத்தின் வழியாக பாதையாக எனது நிலத்திற்கு சென்று வருவதை காண்பிப்பதற்கு போட்டோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது பத்திரத்திலும் எனது முன் பாத்தியஸ்தர் பத்திரத்திலும் பாதையின் நீளம்,அகலம் சொல்லவில்லை என்றால் சரிதான் பாதை என்றுமட்டும் சொல்லப்பட்டுள்ளது. பிரதிவாதி எங்கள் நிலத்தை விலைக்கு கேட்டதாக பிராதில்

சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். எந்த தேதியில் எந்த வருடம் கேட்டார் என்று சொல்லவில்லை என்றால் சரிதான் பெருந்தோற்று காலத்தில் கேட்டார். நான் கிரையம் கொடுக்காததால் பிரதிவாதியின் நிலத்தில் வடகடைசியில் கரை அமைத்துவிட்டதாக பிராதில் சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். அந்த கரை 4 அடி என்று மட்டும் சொல்லியுள்ளேன் என்றும் நீளம்,அகலம் சொல்லவில்லை என்றால் சரிதான். 4 அடி கரை அமைத்தாக பிரதிவாதிக்கு எதிராக காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். அவ்வாறு கொடுத்திருந்தால் அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியும் என்றால் சரிதான். கரை அமைத்தாக சொல்லுவதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி - வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
13.06.2025.